என்று ஒரு கவிஞர் எழுதினார். திண்டுக்கல் நகரத்தில் ஏழைகள் வீடே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடே இல்லாத ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவிகள் தனக்குரிய கூட்டை தானே கட்டிக் கொள்ளும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழைப் பொது மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், தொலைநோக்குத் திட்டம் 2023-ல் "குடிசைகளற்ற நகரங்களை உருவாக்குவோம்" என்று சபதம் ஏற்றிருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, அனைத்து மாநகராட்சிகளிலும் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. திண்டுக்கல் நகராட்சி தற்போது மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. "2023 ஆம் ஆண்டிற்குள் திண்டுக்கல் மாநகரம் குடிசைகளற்ற மாநகரமாக ஆக்கப்படும்" என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம் நிறைவேறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

257—

புறவழிச் சாலை

***6569—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 25]

(அ) திருத்தணி தொகுதி, சென்னை-அரக்கோணம்-காஞ்சிபுரம்-திருப்பதி இணைப்புச் சாலைகளில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சென்னை-அரக்கோணம்-காஞ்சிபுரம்-திருப்பதி இணைப்புச் சாலைகளில் திருத்தணி நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைக்க ஏதுவாக நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்களித்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மக்கள் வளம் பெருக்கும் மாதவமே! மக்கள் நலம் காக்கும் மாதரசே! கலைமகள், திருமகள், மலைமகள் மூவரும் ஓர் உருவில் அவதரித்த ஒப்பில்லா மூலவர் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும், பேச்சாலும், நடையாலும், கலையாலும், பேசும் மொழியாலும், வீரத்தாலும், ஓங்கி உயர்ந்திட்ட எங்கள் தாயே! தமிழ்நாட்டின் தனி மனித இராணுவமே! நித்தம், நித்தம் புது திட்டங்களைப் படைத்து, தமிழக மக்களின் ஏற்றத்திற்காக அயராது உழைக்கும் மந்திர சக்தி படைத்த மகா சக்தியே! மங்காத மனித நேயம், தளராத தன்னம்பிக்கை, உயரிய உள்ளம், துயர் துடைக்கும் தொலைநோக்குப் பார்வை கொண்டு, விதி 110-ன்கீழ் நாளும் நல்ல பல திட்டங்களை அறிவித்து, மேகங்கள் ஒன்று திரண்டு வான்மழை பொழிந்து எப்படி பூமியைக் குளிர்விக்கிறதோ அதுபோல மாண்புமிகு அம்மா அவர்களது 110 விதி அறிவிப்பு மழையை தினம் தினம் பொழிந்து, மக்கள் மனங்களைக் குளிர்வித்து, நல்லாட்சி நடத்தும் வீரமங்கை வேலுநாச்சியாரே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமே தமக்கு உறவு, தமிழகமே*

தனக்கு வேலி எனும் தமிழ் கொண்ட துறவறத்தால், தூய உள்ளத்தால், தொண்டு மனத்தால், தாய்மையின் உறைவிடமாய் வாழும் எங்கள் தாயே! மாண்புமிகு அம்மா, உங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா!

ஏர்கொண்ட உழவனின்றி தேர்கொண்ட மன்னன் ஏது? பேர் சொல்லும் புலவன் ஏது? போர் செய்யும் வீரன் ஏது? அத்தகைய விவசாயத்திற்கு முக்கிய ஆதாரம் நீராதாரம். 37 ஆண்டுகள் சட்டப் போராட்டம் நடத்தி, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 6 அடி உயர்த்தி, மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய 5 மாவட்ட ஏர் ஓட்டும் உழவனின் நீரோட்டம் காத்த நீதி தேவதையே! கிராமப்புறத்தைச் சார்ந்த ஏழையெளிய விவசாய மக்களுக்கு ஆடு, மாடுகள் வழங்கி, வெண்மைப் புரட்சியைக் கொண்டு வந்த வேளாண் விஞ்ஞானியே, மாண்புமிகு அம்மாவே! மனு எழுதிக் கொண்டு மக்கள் அதிகாரிகளைத் தேடிய காலம் மாறி அம்மா திட்டத்தால் அதிகாரிகள் மக்கள் இருப்பிடத்திற்கே சென்று, மனுக்களைப் பெறுகிறார்கள். காலையில் கொடுத்த மனுவுக்கு, மாலையே பட்டா, சிட்டா, சாதிச் சான்றிதழ், ரேஷன் கார்டு, முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவு முதலானவற்றைக் கொடுத்து முடித்து வைக்கும் திட்டமான, 'அம்மா திட்டம்' என்னும் முத்தான திட்டம் தந்த பராசக்தியே!

தொழில் நிறுவனங்களில் தேவைப்படும் மனித ஆற்றலை வழங்கி, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், விதி 110-ன்கீழ் "அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம்"-ன்கீழ் ரூ.6,525 கோடியில் 15 புதிய திட்டங்களை அறிவித்து, வேலை தேடும் இளைஞர்கள் வயிற்றில் பாலை வார்த்த ஏழைகளின் காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) "முடியாது என்ற வார்த்தை எனது அகராதியில் இல்லை" என்று சொன்ன மாவீரன் நெப்போலியன் போல் "இல்லை என்ற வார்த்தை எனது அகராதியிலும் இல்லை; எனது ஆட்சியிலும் இல்லை" என்ற இலக்கணத்திற்கு உகந்த மாண்புமிகு அம்மா அவர்கள், திருத்தணி தொகுதி மக்கள் சார்பாக, நான் கேட்ட புறவழிச் சாலை அமைப்பதற்கான நிதியைக் கிள்ளிக் கொடுக்காமல், 46 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்த வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், "புறவழிச் சாலை அமைத்துத்

2014 ஜூலை 25]

தரப்படும்" என்று அறிவித்த மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசை மாறிய இந்தப் பறவைக்கு சரியான திசையைக் காட்டி, அமைதி, வளம், வளர்ச்சிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வழிவகுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும், எனக்கு இரண்டு முறை பேசுவதற்கு நல்வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-சமயநல்லூர்-பொதும்பு-அதலை-அய்யர் பங்களா-கடனேந்தல் வழியாக மாட்டுத்தாவணிக்குச் செல்லும் புறவழிச் சாலை அமைக்கும் பணி நீண்ட நாட்களாகச் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தப் புறவழிச் சாலையைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த காளவாசல், கோரிப்பாளையம், தெற்குவாசல் ஆகிய இடங்களிலுள்ள போக்குவரத்து நெருக்கடியைத் தீர்த்து வைக்க, சிந்தாமணி வழியாக புதிய பாலம் கட்டும் பணி எந்த நிலையிலுள்ளது என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே புறவழிச் சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில், படிப்படியாக புறவழிச் சாலைகள் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கின்றார்கள். நிதிநிலைக்கேற்ப, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டுகூட 5, 6 புறவழிச் சாலைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். என்னுடைய துறை மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, அங்கே புதிய புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றேன். ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

258—

சொந்தக் கட்டடம்

***35964—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், கோவிந்தம்பாளையம் ஊராட்சியில், கோவிந்தம்பாளையம்-1, கோவிந்தம்பாளையம்-2 மற்றும் பள்ளியார்பாளையம் என மூன்று